# 3C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. இயல் 3 இல் உங்களுக்கு மிகவும் இன்றியமையாதன எனத்தோன்றும் மூன்று அல்லது நான்கு முடிவுகளை தயவு செய்து நோக்கவும். முடியுமாயின் ஏனையவர்களுடன் 2 பேர் கொண்ட குழுக்களுடன் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

2. மாணவர்களின் கூற்றுக்களுடனும் இதே வழியைப் பின்பற்றுங்கள். இது தொடர்பாக எது மிகவும் இன்றியமையாதது என உங்களுக்கு தெரிகிறது, ஏன்?

3. இயல் 3B இல் உள்ள மாணவர்களின் கூற்றுக்களுடன் இயல் 3A யிலுள்ள பின்னணி உரையை ஒப்பிடும் போது தொடர்புடைய ஒற்றுமைகள், வேற்றுமைகள் எங்கே உள்ளன?

4. 3A பகுதியில் மாணவர்களின் கண்ணோட்டத்தில் பொருந்தாதவை எனக் கற்பித்தலின் தரம் மற்றும் ஆசிரியர் ஆளுமையின் குணப்பண்புகள் உள்ளனவா? மாறாக பட்டறிவு தொடர்பான ஆராய்ச்சியில் மாணவர்களின் கூற்றுகளுக்கு நிகர் அற்றவைகள் உண்டா?

5. பா.மொ.க கற்பித்தலில் உங்கள் பட்டறிவுகளைப் பற்றி எண்ணுவீர்களாயின்: பின்னணி உரையில் உள்ள கோடிட்ட பண்புகளில் எவை மிகவும் இன்றியமையாதவை, குறிப்பாக பா.மொ.க கற்பித்தலுக்கு? மறுபுறத்தில் பா.மொ.க க்கு பொருத்தமற்றவை என உங்கள் கண்ணோட்டத்தில் காணப்படும் கற்றல் திறனின் பண்புகள் இருக்கின்றனவா?

6. இயல் 3 இன் (ஹெல்ம்கே மற்றும் ஹெல்ம்கே) மற்றும் 5(வைடிங்கர்) இன் பின்னணி உரைகளில் உள்ள திறவுக் கூறுகளை ஒப்பிட்டீர்களாயின்: எங்கே அவர்கள் கூறியது கூறுகின்றனர் மற்றும் இணைகின்றனர், எடைபோடல் மற்றும் சொல்லாடலில் வேறுபாடுகள் உள்ளனவா?

7. உங்கள் தன் வகுப்பறைக் கற்றல் திறனின் இயல்புகளைக் கருத்திற்கொண்டு நீங்கள் எங்கே வலுக்களை உணர்கிறீர்கள் எங்கே மேம்பாடு செய்யவும் விரிவுபடுத்தவும் எண்ணுகிறீர்கள், எ.டு. உங்கள் ஆற்றலின் அடிப்படையில்?

II